**අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව**

පාර්ලිමේන්තුවේ රාජ්‍ය ගිණුම් කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழு**

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**Commission to Investigate Allegations of Bribery or Corruption**

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of the standing order No. 119(4)

**அரச கணக்குக் குழு அறிக்கை தொட்பாக எமது அவதானங்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் - 2020 ஆம் ஆண்டு.**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 183

நிறுவனத்தின் பெயர் - **இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு**

| குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளைத் திருத்தியமைப்பதற்கு நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் / தற்போதைய நிலமைகள் |
|---|---|
| வாகனம் ஒவ்வொன்றுக்குமான வாகன சம்பவ பதிவேடுகள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்படவில்லை. | கணக்காய்வு தினத்தன்றும் கூட, வாகனம் ஒவ்வொன்றுக்குமான வாகன சம்பவ பதிவேடுகள் பேணப்பட்டிருந்தது. அவை தற்போது வரை இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது. |
| 2016.12.29ஆம் திகதிய 2016/30ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1ஆம் பந்தியில் குறிப்படப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, விசேட செலவுகள் பிரிவிற்கு சொந்தமான வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்படவில்லை. | ஆனைக்குழுவின் அனைத்து இருப்பு வாகனமும் முழுமையாக எரிபொருள் நிரப்பப்பட்டு, ஓட்டுனர் பதிவுகள் மூலம் தொடர்ந்து சரிபார்க்கப்பட்டு வருகின்றது. இருப்பினும், தற்போதைய எரிபொருள் கட்டுப்பாடுகள் காரணமாக எரிபொருள் சோதனை கடினமாகியுள்ளது. |
| நி.ஒ 371 இன் பிரகாரம், வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு நிதி ஒரு மாதத்துக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை. | இம் முற்பணம் புலனாய்வு மற்றும் சுற்றிவளைப்பு கடமைகளுக்காக பங்கேற்கும் விசாரணை உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்பான தங்குமிடங்களுக்காக வழங்கப்பட்ட முற்பணம் என்பதுடன், உரிய கடமைகள் நிறைவடைந்தவுடன் அம் முற்பணத்தை தீர்ப்பதற்கு அவ் உத்தியோகத்தர்கள் தவறுவது, மிகக் குறைந்த உத்தியோகத்தர்கள் காணப்படுவதும், அவர்களை உடனடியாக மற்றுமொரு கடமைக்கு இணைப்பு செய்யப்படுவதனாலும் ஆகும். இது எவ்வாறாக இருப்பினும் பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணத்தை தீர்ப்பதற்கு உரிய உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |
| 2002.09.12ஆம் திகதிய 402ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், நிதி ஆண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்தச் செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் கூடியதாக பாராளுமன்றத்துக்கு சமர்பிக்கப்படவில்லை. | இந்த அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், செயலாற்றுகை அறிக்கையுடன் கணக்காய்வு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். செயலாற்றுகை அறிக்கை முதல் காலாண்டிலேயே ஜனாதிபதி அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு அறிக்கை தாமதமானதால் இந்த அறிக்கையை அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டது. நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக கணக்காய்வு அறிக்கை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இவ் வருடம் இந்த அறிக்கையை குறித்த தினத்தில் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

W.K.D. WIJERATNE
Director General
Commission to Investigate Allegations
of Bribery or Corruption
No.36, Malalasekara Mw. Colombo 07